**'' கண்ணைக் காப்பது இமை ''**
**'' மண்ணைக் காப்பது மழை ''**

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2013-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ஆம் நாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**அ) திருக்குறள் :** **" உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்**
**கடையரே கல்லா தவர்."**

**பொருள் :** **செல்வர் முன் வறியவர் ஏங்கி நிற்பது போலக் கற்றவர் முன்னே ஏங்கிப் பணிந்து நின்றாவது கல்வி கற்றவரே உயர்ந்தவர். கல்லாதவர் இழிந்தவர் ஆவர்.**

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

### 1) <u>சி.டபிள்யு.2/ 000307/2012</u>

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)–ன்படி 06.02.2013-ம் தேதி நடைபெற்ற நகரமைப்புக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : நகரமைப்புக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.346</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது.</u>**

### 2) <u>சி.டபிள்யு.2/ 40475/2011</u>

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)–ன்படி 18.02.2013-ம் தேதி நடைபெற்ற சுகாதாரகுழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : சுகாதாரகுழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.347**
**பதிவு செய்யப்பட்டது.**

**3) மநி 2/11632/10**

மதுரை மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் விநியோகப் பிரிவில் 22 பணியாளர்களுக்கு தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை-1 (Skilled Assistant Grade-1) என்ற பணியிடத்திற்கு நியமனக் குழு தீர்மானம் எண்.59, நாள் : 08.11.2005–ன்படி பணி உயர்வு வழங்கி சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டது.

மேற்படி பதவி உயர்வு அளிக்கப்பட்டதற்கு அரசுக்கு எழுதி உரிய ஆணையை பெறப்பட வேண்டுமென மாமன்ற தீர்மானம் எண்.452, நாள் : 28.11.2005-ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்பேரில் அரசுக்கு இவ்வலுவலக கடிதம் எண். ம.பொ.3/34666/05, நாள் : 14.02.2006-ல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதில் அரசாணை எண்.14 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 08.03.2010-ன்படி அரசின் பின்னேற்பு செய்து ஆணை வரப்பெற்றுள்ளது. மேற்படி அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.348**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) மநி.9/06907/2013**

மதுரை மாநகராட்சி மைய நிர்வாகப்பிரிவு கருப்பட்டி சத்திரத்தில் **water carrier-**ஆக பணிபுரிந்து வரும் திரு.M.மீனாட்சி சுந்தரம் என்பவருக்கு மாத ஊதியம் ரூ.330/-ம், மற்றும் திருமதி.M.பாக்கியலெட்சுமி என்பவருக்கு மாத ஊதியம் ரூ.510/- என வழங்கப்பட்டு வருகிறதை ஏழை எளிய ஆதரவற்றவர்களுக்கான ஓய்வூதியம் மாதம் ரூ.1000/- என அரசு வழங்கப்பட்டு வருகிறது.

எனவே மேற்படி நபர்களின் ஏழ்மையை கருத்தில்கொண்டு ஒரு நபருக்கு மாத ஊதியம் ரூ.1000/- என வழங்க மாமன்ற ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.349**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5) ம.பொ.1/5180/13**

மதுரை மாநகராட்சி மைய லாரிநிலையத்தில் உள்ள வாகனம் (எண்.TN A 3952) நகரமைப்புப் பிரிவில் ஆக்கிரமிப்பு அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வாகனம் கடந்த 24.07.78ல் வாங்கப்பட்டு சுமார் 34 ஆண்டு காலத்திற்கும் மேலாக பழையது ஆகும். பராமரிப்புச் செலவினங்கள் அதிகமாவதாலும், வாகனத்தின் ஆயுட்காலம் முடிவடைந்து விட்டதாலும், கழிதல் செய்ய வேண்டியது அவசியம் ஆகிற காரணத்தினால் மேற்படி வாகனத்தினை கழிதல் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களது குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.350**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6) ந.க.எண்.A3/011130/13**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 9 மேல்நிலை பள்ளிகளுக்கு இசை வாத்தியக் கருவிகள் (Drum set) வழங்கவும் மேற்படி செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**குறிப்பு:** ஒன்பது பள்ளிகளின் பெயர் பட்டியல் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.351**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**7) ந.க.எண்.A3/011131/13**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 15 மேல்நிலை பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்வித்திறனை மேம்படுத்துவதற்கு தேவையான அறிவியல் ஆய்வக உபகரணங்கள் வாங்குவதற்கும் மேற்படி செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.352**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) ந.க.எண்.A3/011132/13**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 66 பள்ளிகளில் 4 பள்ளிகளில் மட்டுமே ஆங்கில வழிக் கல்வி முறை உள்ளது. மதுரை மாநகராட்சி பகுதியை சேர்ந்த ஏழை, எளிய மாணவர்களுக்கு மேற்படி கல்வி முறையை ஆரம்பித்தால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எனவே 20 ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கும் 20 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஆங்கில வழிக்கல்வி முறையை துவங்குவதற்கு அரசின் அனுமதியை பெறுவதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**குறிப்பு: 40–**பள்ளிகளின் பெயர் பட்டியல் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.353</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**9) <u>ந.க.எண்.A3/011133/13</u>**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளில் பெண்கள் பயிலும் **16** பள்ளிகளில் மொத்தம் 10,497 மாணவிகள் பயின்று வருகின்றனர் மேற்படி மாணவிகளுக்கு சுகாதார நலனை முன்னிட்டு இலவசமாக Napkin வழங்கவும், அதற்கான Napkin Vending Machine மேற்படி **16** பள்ளிகளிலும் அமைக்கவும், அதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**குறிப்பு: 16–**பள்ளிகளின் பெயர் பட்டியல் கோப்பில் இணைக்கப்பட்டுள்து.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.354</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**10)<u>ந.க.எண்.A3/011134/13</u>**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் **66** பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் விளையாட்டுத்திறனை மேம்படுத்துவதற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கவும், மேற்படி செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.355</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**11)<u>ந.க.எண்.A3/011135/13</u>**

மதுரை மாநகராட்சி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் **24** உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளுக்கு மாணவர்களின் பொது அறிவுத்திறனை வளர்ப்பதற்கு நூலகப் புத்தகங்கள் வழங்கவும், மேற்படி செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.356</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**12)<u>H3/10196/07</u>**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிக்காக ஒரு மண்டலத்திற்கு தலா 15 நபர்கள் வீதம், நான்கு மண்டலத்திற்கு 60 நபர்களும் மேலும் கூடுதலாக பதிலி பணியாளர்கள் மண்டலம் எண்.2ல் 3 நபர்களும் மண்டலம் எண்.3ல் 5 நபர்களும் சேர்த்து ஆக மொத்தம் 68 நபர்களை வேலைவாய்ப்பு துறை அலுவலக பதிவு அட்டையுடன் திருவிழா காலங்களில் வேலைக்கு ஆள் எடுப்பது போல் முற்றிலும் தற்காலிகமாக தினக்கூலிகளாக 68 நபர்கள் மட்டும் பணிக்கு எடுக்கப்பட்டு பணி செய்து வருகின்றனர் தற்சமயம் இப்பணியாளர்களின் பணிக்காலம் 05.01.2013ல் முடிவடைந்து விட்டது. பொது மக்கள் நலன் கருதியும் மீண்டும் பணியினை தொடரவும் 07.01.2013 முதல் 05.04.2013 வரை 89 நாட்களுக்கு மட்டும் பணியினை நீட்டிப்பு செய்து பணி செய்யப்பட்டு வருகின்றனர். மேற்படி பணிக்கு மாநகராட்சி பொது நிதியில் இருந்து தினக்கூலி அடிப்படையில் உரிய ஊதியம் வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.357</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**13)<u>மவ1/24688/07</u>**

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட அசையாச் சொத்துக்களாகிய கடைகள் கட்டிடங்கள் மற்றும் நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுவதற்கும் குத்தகையை புதுப்பிப்பது குறித்தும் திருத்திய நடைமுறைகள் குறித்து வெளியிடப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 03.07.2007 தேதிய அரசாணை எண்:92-படி 3 வருடத்திற்கு ஒரு முறை புதுப்பித்து வழங்கப்பட வேண்டும். இதற்கு சதுர அடி அடிப்படையில் கீழ்க்கண்டவாறு புதுப்பித்தல் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | 100 சதுர அடிக்குள் உள்ள இனங்கள் | - | ரூ.500 |
| 2. | 100-500 சதுர அடிக்குள் உள்ள இனங்கள் | - | ரூ.1000 |
| 3. | 500-1000 சதுர அடிக்குள் உள்ள இனங்கள் | - | ரூ.1500 |
| 4. | 1000 சதுர அடிக்கு மேல் உள்ள இனங்கள் | - | ரூ.2000 |

இதனடிப்படையில் 01.04.2007, 01.04.2010, 01.04.2013 ஆகிய தொகுப்பு ஆண்டுகளுக்கு புதுப்பித்தல் கட்டணம் வசூல் செய்து கொண்டு தற்போதுள்ள உரிமத்தாரர்களின் உண்மை தன்மையை சரிபார்க்கும் பொருட்டு உரிமம் வழங்கப்பட்ட அதன் உத்தரவு மற்றும் புகைப்படத்துடன் கூடிய அடையாள ஆவணங்கள் குடியிருப்பு முகவரிக்கான ஆவணங்களுடன் தற்போதைய புகைப்படம் ஒட்டப்பட்டு உரிமத்தாரர்களிடம் புதுப்பித்தல் மனு பெற்று மேற்படி ஆவணங்களை சரிப்பார்த்து உரிமம் வழங்கவும் சரியான ஆவணங்கள் சமர்பிக்காத மற்றும் புதுப்பித்தலுக்கு விண்ணப்பம் சமர்பிக்காத இனங்களின் குத்தகை உரிமத்தை ரத்து செய்து ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விடவும்.

மற்றும் விரிவாக்க பகுதிகளிலிருந்து வரப்பெற்ற மாத வாடகை குத்தகை இனங்களின் வாடகையை 01.04.2012 முதல் சந்தை மதிப்பின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்யவும், அதன்படி திருத்தி அமைக்கப்பட்ட வாடகையை ஒப்புக்கொள்ளாத இனங்களை பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விடவும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.358**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 10.04. 2013**

# மதுரை மாநகராட்சி

## மாமன்றக் கூட்டம்

## Table Agenda - நாள் : 17.04.2013

**1) மவ5/17809/12**

மதுரை மாநகராட்சி, மண்டலம் எண்.3, வார்டு 50, கீழமாரட் வீதி, தினசரி மார்க்கெட்டில், மேல்நிலை நீர்தொட்டி கிழக்கு மூலையில் 8'x8' அளவில் கான்கிரீட் கட்டிடம் பொறியியல் பிரிவு பயன்பாட்டில் இருந்தது. தற்போது பயன்பாடு இல்லாமல் பூட்டிய நிலையில் உள்ளதை பொது ஏலம் மூலம் வாடகைக்கு விட சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளரின் குறிப்பு பெறப்பட்டுள்ளது. மேலும் அன்னார் மேற்கண்ட கடைக்கு மாத வாடகையாக ரூ.2813/-ம் (ரூபாய் இரண்டாயிரத்து எண்ணூற்றி பதிமூன்று மட்டும்) திரும்ப பெறாத வைப்புத் தொகை ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) நிர்ணயம் செய்து வரப்பட்டுள்ளதை ஏற்று பொது ஏலத்தில் விட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.359**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) சி.டபிள்யு.1/20009/2012**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 செடியூல்–1 விதி 19(2)ன்படி 08.03.2013மற்றும் 25.03.2013-ம் தேதிகளில் நடைபெற்ற நியமனக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : நியமனக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.360**

**பதிவு செய்யப்பட்டது.**

**3) <u>ம.பொ.4/Est.1006/12-13</u>**

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.56-ல் உள்ள சின்ன அனுப்பானடி TNHB மெயின் சாலையில் புதிதாக பாதாள சாக்கடை அமைக்கும் வேலைக்கு 2012-13 விலைவிகிதப்படி மதிப்பீடு ரூ.89,32,000/-க்கு (ரூபாய் எண்பத்தி ஒன்பது லட்சத்து முப்பத்தி இரண்டாயிரம் மட்டும்) தயார் செய்து பொறியாளரின் தொழில்நுட்ப ஒப்புதலுக்கும், ஆணையாளர் அவர்களின் நிர்வாக ஒப்புதலும் பெறப்பட்டது. மேற்கண்ட மதிப்பீடு ரூ.89,32,000/-க்கு மாமன்றத்தின் நிர்வாக ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.361</u>**
**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**4) <u>மவ1/23434/12</u>**

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட ஞான ஒளிவுபுரம் மாநகராட்சி காலனி கதவு எண்:82. மேலப்பொன்னகரம் 6வது தெரு குடியிருப்பை மாநகராட்சி பணியாளரான காலஞ்சென்ற திரு.எஸ்.வி.சிவலிங்கம் என்பவரின் வாரிசுதாரரும் மகளுமான திருமதி.எஸ்.முத்துலட்சுமி என்பவர் கிரையப்பத்திரம் பதிவு செய்துதர கோரியுள்ளார்.

மதுரை மாநகராட்சி ஞான ஒளிவுபுரம் காலனி வீடு காலஞ்சென்ற திரு.எஸ்.வி. சிவலிங்கம் என்பவர் மாநகராட்சி மின் பிரிவில் பணிபுரிநது பணியில் இருக்கும் போது 18.06.1984ல் காலம் சென்றதாக மனுதாரர் மனுவில் தெரிவித்துள்ளார். அதனடிப்படையில் இப்பொருள் தொடர்பாக கோப்பு எதுவும் இருக்கையில் **கிடைக்க**ப்பெறாததால் அன்னார் கிரையத்தொகை முழுவதும் பிடித்தம் செய்யப்பட்ட விவரம் அறிய இயலவில்லை.

மேலும் இப்பொருள் தொடர்பாக மாமன்றம் தீர்மான எண். 330 நாள்: 27.07.1971ல் மாநகராட்சி குடியிருப்பு வீடுகளில் அவ்வீடுகளில் குடியிருக்கும் நபர்களுக்கே சொந்தமாக்கி விடலாம். எனவும், உத்தேச விலை ரூ.7508/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் அதே தீர்மானத்தில் வீடு ஒதுக்கீடு செய்த தேதி முதல் வீட்டிற்கு உரிய சொத்துவரி வசூலிக்கப்படும். வரித்தொகையை அவர்களே மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும் என உள்ளது. **மேற்கண்ட விவரப்படி பார்த்தால் மேற்கண்ட வீடு திரு.எஸ்வி.சிவலிங்கம்** என்பவருக்கு இவ்வலுவலகம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது தெளிவாகிறது. மேலும் இது தொடர்பாக மண்டலம் எண் 1ல் இவ்வீட்டை வாரிசு அடிப்படையில் திருமதி. எஸ். முத்துலெட்சுமி மற்றும் ஆணையாளர் மதுரை மாநகராட்சி என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இனம் தொடர்பாக மாநகராட்சி நிலை வழக்கறிஞர் **மேற்படி மனுதாரர் அரசு ஆணைக்கு முன்பு மாநகராட்சி நிர்வாகத்தால் வழங்கப்பட்ட உத்திரவு என்பதால் மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது எனத்தெரிவிப்பதுடன் மேற்படி மனுதாரரிடமிருந்து மேற்படி வீட்டிற்கு ஏற்கனவே நிர்ணயித்த தொகையை உரிய வட்டியுடன் சம்பந்தப்பட்ட மனுத்தாரரிடமிருந்து வசூல் செய்து கொள்ளும்படி கருத்து தெரிவித்துள்ளார்.**

**எனவே மேற்படி மனுதாரருக்கு (திருமதி.முத்துலெட்சுமி) மேற்கண்ட காலனி வீட்டை உரிய தொகை பெற்றுகொண்டு பத்திர பதிவு செய்வது தொடர்பாக மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.**

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.362</u>**

**<u>மாநகராட்சி நிலை வழக்கறிஞர் கருத்தின்படி மனுதாரரிடமிருந்து மேற்படி வீட்டிற்கு நிர்ணயித்த தொகையை உரிய வட்டியுடன் வசூல் செய்து கொண்டு அன்னாரின் யெரில் பத்திரம் பதிவு செய்து கொடுக்க குறிப்பு ஒப்புக்கொள்ளப்படுகிறது.</u>**

**5) <u>ம.பொ. 4/ம.எண். 304 / 12-13</u>**

மதுரை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சி, பேரூராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளையும் சேர்த்து தற்போது மொத்தம் 100 வார்டுகள் 4 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு பொதுமக்களின் அத்தியவசியப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி 4 மண்டலங்களில் மண்டலம் 2 மற்றும் மண்டலம் 3 க்கான அலுவலகப் பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மண்டல அலுவலகங்களில் போதிய இட வசதி இல்லாத காரணத்தினால் மேற்படி இரண்டு மண்டலங்களுக்கும் தனியாக மண்டல அலுவலகங்கள் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி பணிகளை மேற்கொள்ள பகுதி II திட்டம் 2012-13ம் ஆண்டு திட்ட நிதியின் கீழ் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. (ந.க.எண். 48283/P 1/2011-1, நாள். 18.06.12) மேலும் இப்பணிகளுக்கு மாமன்றக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டு (மாமன்ற தீர்மானம் எண். 214, நாள். 27.07.2012) கடந்த 13.09.12 அன்றும் 28.11.12 அன்றும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப குழுவின் மூலம் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

| வ. எண். | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | L1 ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகித விபரம் |
|---|---|---|---|---|
| *1* | *2* | *3* | *4* | *5* |
| 1 | **ம.பொ. 4/ம.எண்.** 304/12-13 வார்டு எண். 43, ரேஸ்கோர்ஸ் சாலையில் மண்டலம் 2 அலுவலக கட்டிடம் கட்டுதல் | 162.50 | திரு.G. அறிவழகன் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.99% அதிகம் |
| 2 | **ம.பொ. 4/ம.எண்.** 305/12-13 வார்டு எண். 71, புதுராமநாதபுரம் சாலை OHT வளாகத்தில் மண்டலம் 3 அலுவலக கட்டிடம் கட்டுதல் | 162.50 | திரு.G. அறிவழகன் | மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.99% அதிகம் |

மேற்கண்டவாறு மண்டல அலுவலகங்கள் கட்டுவதன் அத்தியவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்கண்ட ஒப்பந்தக்காரர் திரு.G. அறிவழகன் அவர்களின் மதிப்பீட்டு விலை விகிதத்தினை ஏற்று அன்னாருக்கு வேலை உத்திரவு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.363**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

## 6) Jn. S. 2/21387/08

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சியின் பழைய 72 வார்டுப் பகுதிகளில் விடுப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைப்பதற்கும், பழைய பாதாள சாக்கடையை புதுப்பிக்கவும், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அவனியாபுரம் மற்றும் சக்கிமங்கலம் ஆகிய பகுதிகளில் அமைப்பதற்கும் மத்திய மற்றும் மாநில அரசுகள் ஒப்புதல் வழங்கியிருந்தது. இப்பணிகளில் அவனியாபுரம் மற்றும் சக்கிமங்கலம் பகுதிகளில் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. விடுப்பட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்கும் பணிகளையும் பழைய பாதாள சாக்கடையை புதுப்பிக்கும் பணிகளை செய்வதற்காக M/s தீபிகா இண்பிராடெக், ஹைதராபாத் நிறுவனத்தார் ஒப்பந்தம் செய்யப்பட்டார்கள். இத்திட்டத்திற்கு திட்ட மதிப்பீட்டில் 30% தொகையானது மாநகராட்சியின் பங்களிப்புத் தொகையாகும். மாநகராட்சியின் நிதிப் பற்றாக்குறையின் காரணமாக இப்பணிகள் தொடர்ந்து செய்ய இயலாத நிலை ஏற்பட்டது. எனவே மேற்கண்ட நிறுவனத்தார் ஒப்பந்தத்தை எதிர்த்து Adjudicator (நடுநிலையாளர்)யிடம் மேல்முறையீடு செய்தனர். நடுநிலையாளரின் தீர்ப்பை ஏற்காத இயலாத காரணத்தினால் மேற்கண்ட நிறுவனத்தார் Arbitration Tribunal (மன்ற தீர்ப்பாயம்)யிடம் மறு மேல்முறையீடு செய்தனர். இரு தரப்பினரின் எழுத்துப்பூர்வமான கருத்துக்கள் மற்றும் அதன் மீதான விவாதங்கள் நடைபெற்ற பின்னர் மூவர் அடங்கிய தொழில்நுட்ப தீர்ப்பாயம் இம்மறு மேல்முறையீடு மீதான தீர்ப்பினை 17.12.2012 அன்று வழங்கியது. தீர்ப்பாயத்தின் உத்திரவுகள் மாநகராட்சியின் தொழில்நுட்ப ஆய்வுக் குழுவில் வைத்து விவாதிக்கப்பட்டு தீர்ப்பாயத்தில் வழங்கிய உத்திரவுகளை செயல்படுத்த பரிந்துரை செய்துள்ளது.

இதில் முக்கியமாக, பழைய பாதாள சாக்கடை அமைப்புகளை மாற்றி புதிய அமைப்பதற்கான விலைப்புள்ளியை ஒப்பந்தத்தில் இல்லாத இனமாகக் கருதி, புதிய Schedule of Item தயார் செய்து மேற்கண்ட பணியின் தன்மையைக் கருதி விலைப்புள்ளி கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற Arbitration Tribunal (மன்ற தீர்ப்பாயம்) தீர்ப்பின் படி, பழைய பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்கும் பணிக்கு புதிய Schedule of item –ன்படி மொத்த தொகை ரூ. 726268541/- என கணக்கீடு செய்யப்பட்டது.

இந்த தொகை தொழில்நுட்பக் குழுவில் விவாதத்தில் இத்தொகையினால் ஏற்படும் நிதி வேறுபாடு ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட தொகைக்குள்ளாகவே உள்ளபடியாலும், புதியதாக ஒப்பந்தம் கோரும் பட்சத்தில் நிதிச் சுமை ஏற்படும் என்ற காரணத்தினாலும் இத்திட்டமானது 31.03.2014க்குள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற அரசின் கொள்கை முடிவினைக் கருத்தில் கொண்டும் புதிதாக ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கும் பட்சத்தில் கால தாமதம் ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டும் மேற்கண்ட பணிக்கான கணக்கீடு செய்யப்பட்ட தொகையினை ஒப்புதல் செய்து Arbitration Tribunal தீர்ப்பின் படி M/s. தீபிகா நிறுவனத்தின் சம்மதத்திற்கு அனுப்பப்பட்டது.

M/s. தீபிகா நிறுவனம் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள விலைப்புள்ளியை மாற்றி 13.03.2013 அன்று சமர்ப்பித்திருந்தனர். அந்த விலைப்புள்ளியை தொழில்நுட்ப குழுவில் வைக்கப்பட்ட போது சில இனங்களுக்கான விலைப்புள்ளி மிகவும் குறைவாகவும், சில இனங்கள் கூடுதலாக உள்ளது என கருதி திருத்திய விலைப்புள்ளி பெற பரிந்துரை செய்தது. தொழில்நுட்ப குழுவின் பரிந்துரையின் படி M/s. தீபிகா நிறுவனம், விலைப்புள்ளியை நிவர்த்தி செய்து, பழைய பாதாள சாக்கடை அமைப்புகளை மாற்றும் பணியினை ரூ.**726101194**–ல் செய்து முடித்துதர ஒப்புக்கொண்டு திருத்திய விலைப்புள்ளி

சமர்ப்பித்துள்ளனர். இந்த திருத்திய விலைப்புள்ளியை தொழில்நுட்ப குழுவில் வைத்து விவாதிக்கப்பட்டதில் மதுரை மாநகராட்சியின் நிதி பற்றாக்குறையினால் இத்திட்டத்திற்கு வழங்கப்பட வேண்டிய பங்குதொகையை வழங்காத நிலையையும் இந்த பற்றாக்குறையை போக்க தமிழக அரசு சிறப்பு நிதி ஒதுக்கியும், மேலும் இத்திட்டத்தினை முடிப்பதற்கு மார்ச்–2014 வரை கால நீட்டிப்பு அரசே வழங்கியுள்ளதை கருத்தில் கொண்டும் பழைய ஒப்பந்த விலைப்புள்ளியை இன்றைய நிலையின் விலையேற்றத்தை கணக்கில் கொண்டு, புதியதாக ஒப்பந்தம் கோரும் போது ஏற்படும் கூடுதல் விலை விகிதம் மற்றும் திட்டப் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ஆகும் கால தாமதம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, Arbitration Tribunal–ன் படி கணக்கீடு செய்துள்ள தொகைக்குள் M/s. தீபிகா நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ள தொகை ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட தொகைக்கு சமமாக இருந்த காரணத்தினால் M/s. தீபிகா நிறுவனத்தார் Arbitration Tribunal வழங்கியுள்ள தீர்ப்பின் படி கணக்கீடு செய்துள்ள விலைப்புள்ளியினைக் காட்டிலும் குறைவாக கொடுத்துள்ள விலைப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.364</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**7) <u>மநி 4/36673/2001</u>**

மதுரை மாநகராட்சி மைய நிர்வாகப்பிரிவின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் கழகத்தைச் சார்ந்த (Texco-Chennai, The Governement of Tamilnadu Undertaking) பணியாளர்கள் ஆணையாளர் அவர்களின் இல்லத்தில் காவலர்களாக கீழக்கண்டுள்ளபடி பணிபுரிந்து வருகின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைமைக் காவலர் (Head Security Card) | - | நபர் 1 |
| 2. | காவலர் (Security Card) | - | நபர் 1 |
| | மொத்தப் பணியாளர்கள் | – | 2 |

மேற்கண்ட ஒப்பந்தப் பணியாளர்களுக்கு மாமன்ற தீர்மானம் எண்.121 நாள். 30.01.2012-ன் படி ஒப்பந்த காலத்தை நீட்டிப்பு செய்து கட்டணப்பட்டியல் வழங்கப்பட்டது.

எனவே, மேற்படி நிறுவனத்திற்கு ஒப்பந்த காலத்தை 30.09.2013 வரை நீட்டிப்பு செய்யவும் தொடர்ந்து கட்டணப் பட்டியல் வழங்கவும் மாமன்றத்தின் முடிவினை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>குறிப்பு:–</u>**

A. டெஸ்கோ என்பது The Governement of Tamilnadu Under taking ஆகும். அரசு சார்பு நிறுவனம் ஆகும்.

B. வருகைப்பதிவேட்டின் படி பட்டியல் தொகை வழங்க வேண்டியது.

1. தலைமை காவலர் மாதக்கட்டணம் ரூ.10241.00 (8மணி நேரபணி) + சேவைக்கட்டணம் 12% + சேவை வரி 12% கல்வி வரி 2% உயர்நிலைக் கல்வி வரி 1% ஆகமொத்தம் ரூ.12887.60
2. காவலர் மாதக்கட்டணம் ரூ.8906.00 (8மணி நேரபணி) + சேவைக்கட்டணம் 12% + சேவை வரி 12% கல்வி வரி 2% உயர்நிலைக் கல்வி வரி 1% ஆகமொத்தம் ரூ.11207.57

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.365</u>**

**<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>**

**8) <u>ம.பொ. 4 (B 30) / 02243 / 2009</u>**

மதுரை மாநகராட்சியின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கு வைகை அணையில் 1500 மில்லியன் கன அடி நீர் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட குடிநீரில் 900 மில்லியன் கன அடி குடிநீரை 1100mm விட்டமுள்ள குழாய் மூலம் 16.60 கி.மீ. தொலைவிலுள்ள பண்ணைப்பட்டி சுத்திகரிப்பு நிலையம் வரை கொண்டு வரப்பட்டு, பின்னர் சுத்திகரிப்பு செய்த குடிநீரை குழாய் மூலம் 48.80 கி.மீ. தொலைவிலுள்ள மதுரை மாநகராட்சிப் பகுதிக்கு, தானாகவே குடிநீர் தொட்டிகளில் ஏறும் வண்ணம் திட்டம் 1995ம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செப்டம்பர் 2001ம் ஆண்டு வரை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டும் அதன் பின்னர் அக்டோபர் 2001ம் ஆண்டு முதல் மதுரை மாநகராட்சி, பராமரிப்பு பணிகளை மேற்கொண்டும் வருகின்றது. இப்பராமரிப்பு பணிகளை மதுரை மாநகராட்சி செயல்படுத்துவதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந 2) துறை அரசாணை (நிலை) எண். 208, நாள். 17.09.1999ல் மதுரை மாநகராட்சி பணியாளர்கள் திறன் எய்தும் வரையில் 26 பணியிடங்கள் தோற்றுவிக்கவும் அது வரை தமிழ்நாடு குடிநீர் வடிகால்

வாரியத்திலிருந்து தேவைகேற்ப அயற்பணி அடிப்படையில் பணியாளர்களை வரவழைத்துக் கொள்ளவும் மேலும் பைப் லைன்களை கண்காணிக்க TEXCO அமைப்பின் மூலம் பணியாளர்களை பெற்று செயல்படுத்த அனுமதி அளித்துள்ளது. மதுரை மாநகராட்சி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து பணியாளர்களை அயற்பணியில் பெற்றும், பைப் லைன்களின் பராமரிப்பு பணிக்காக பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பெற்றும், பண்ணைப்பட்டி சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பிரதானக் குழாய்களை பராமரிப்பு பணிகளுடன், பிரதான குழாயிலிருந்து பெறப்படும் குடிநீரை வால்வுகளில் இயக்கி பல்வேறு பகுதிகளுக்கு பிரித்து வழங்குதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து பெறப்பட்ட பணியாளர்கள் தாய்த் துறைக்கு திரும்பிய நிலையில் மேற்கண்ட அதே ஒப்பந்தப் பணியாளர்களைக் கொண்டு தொடர்ந்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வைகை அணையில் மீதமுள்ள 600 மில்லியன் கன அடி குடிநீரை, குழாய் மூலம் நவீன முறையில் பண்ணைப்பட்டி சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்தம் செய்து மற்றொரு பிரதானக் குழாய் மூலம் மதுரை மாநகருக்கு 47 மில்லியன் லிட்டர் வழங்குவதற்கு இரண்டாவது வைகை குடிநீர்த் திட்டம் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. இந்நிலையில் இத்திட்டத்தினையும் சேர்த்து குறைந்தளவு ஆனால் திறமையான அனுபவமுள்ள மேற்கண்ட அதே ஒப்பந்தப் பணியாளர்களைக் கொண்டு இது நாள் வரை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், இரண்டு வைகை குடிநீர் திட்டங்களையும் சேர்த்து பராமரிப்பு பணிகளை செய்வதற்கு கூடுதலாக பணியிடங்கள் தோற்றுவிக்க மாமன்றத்தின் (மாமன்ற தீர்மானம் எண். 313, நாள். 09.01.2013) ஒப்புதல் பெற்று அரசுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. இரண்டு வைகை குடிநீர் திட்டங்களும் மதுரை மாநகராட்சியின் முக்கிய குடிநீர் ஆதாரங்களாகும். இவ்விரு குடிநீர் திட்டங்களைக் கொண்டு மதுரை மாநகராட்சியின் பழைய பகுதிகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கும் முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் 1100mm மற்றும் 1800mm விட்டமுள்ள PSC குழாய்களில் ஏற்படும் கசிவுகள் / உடைப்புகள் உடனுக்குடன் சரிசெய்யப்பட வேண்டும். இதில் ஏதேனும் தொய்வு ஏற்படும் பட்சத்தில் மாநகராட்சிப் பகுதிகளின் பெரும்பகுதியில் குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்படும். எனவே இத்திட்டத்தினை முறையாக பராமரிப்பதற்கு இத்திட்டத்தின் பிரதான PSC குழாய்களின் பராமரிப்பில் முன் அனுபவமுள்ள பணியாளர்கள் அவசியம். தற்போது உள்ள பணியாளர்கள், இத்திட்டத்தின் பராமரிப்பு பணியினை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக செய்து வருவதால் மிகுந்த அனுபவம் உள்ளவர்களாக திகழ்கின்றனர். இவர்கள் வைகை அணை முதல் மதுரை மாநகராட்சி வரையுள்ள பிரதானக் குழாய்களின் தன்மையினை நன்கு அறிந்தவர்கள் என்பதால் குறைந்தளவு ஒப்பந்தப் பணியாளர்களைக் கொண்டு மேற்கண்ட பணி திறம்பட செய்து வரப்படுகின்றது. இவர்கள் பல்வேறு ஒப்பந்தக்காரர்களிடம் பணியாளர்களாக தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். வைகை குடிநீர் திட்டங்களின் பராமரிப்பு பணியின் அவசியத்தையும் இப்பணியாளர்களின் முன் அனுபவத்தினைக் கருத்தில் கொண்டும் இப்பணியாளர்களை தினக்கூலிகளாக பணியமர்த்தும் பட்சத்தில் மாநகராட்சியின் நேரடி கட்டுப்பாட்டில் இன்னும் சிறப்பாக செயல்படும் நிலை ஏற்படும்.

எனவே இரண்டு வைகை குடிநீர் திட்டங்களையும் பராமரிப்பு செய்வதற்கு குடிநீரின் அவசியத்தை கருதியும் திட்டத்தின் தன்மை, முன் அனுபவம் ஆகியவற்றை கருத்தில் கொண்டும் இத்திட்டத்தின் கீழ் பணியாற்றும், வைகை அணை, பண்ணைப்பட்டி மற்றும் குடிநீர் விநியோகப் பணியாளர்களை தினக்கூலிகளாக நியமிக்கவும் மேலும் இத்திட்டப் பராமரிப்பு பணிக்கு தேவைப்படும் கூடுதல் பணியாளர்களை தினக்கூலிகளாக எடுத்துக் கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

<u>மாமன்றத்தீர்மானம் எண்.366</u>
<u>குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.</u>

**9) <u>ம.நி.9/05368/13</u>**

மதுரை மாநகராட்சிக்கு சொந்தமான இராணி மங்கம்மாள் சத்திரத்தினை தனியார் மூலம் பராமரிப்பதற்கும் ஏற்று நடத்துவதற்கும் தகுதியுள்ள நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்க அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நதி 4) துறை நாள். 03.07.2007–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு குத்தகைக்கு விடுவதற்கு மேல்நடவடிக்கை தொடரலாம்.

தற்போது இராணி மங்கம்மாள் சத்திரத்தில் 15 அடி நீளமும் 10 அடி அகலமும் கொண்ட 20 அறைகளும் 20 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்ட 4 அறைகளும் உள்ளது. தகுதியுள்ள குத்தகைதாரர்கள் மேற்படி 24 அறைகளிலும் மூலதான செலவினமான குளிர்சாதன வசதிகள், படுக்கை வசதிகள் ஒவ்வொரு அறைகளிலும் மேஜை, நாற்காலிகள், தொலைகாட்சி பெட்டி மற்றும் ஜெனரேட்டர் போன்ற தேவையான உட்கட்டமைப்புகளை ஏற்படுத்தி இத்தங்கும் விடுதியில் தொடர் செலவினமான அலுவலக பணிகளையும் சுகாதாரப் பணிகளையும் மற்றும் இதர பணிகளையும் செய்வதற்கு தேவையான பணியாளர்களை நியமித்து இப்பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான உபகரணங்கள் சொந்த செலவில் வாங்கிக் கொள்ளவும்

மாதந்திர மின்சாரக் கட்டணம், குடிநீர் கட்டணம் ஆகியவற்றை தேர்வு செய்யப்படும் குத்தகைதாரரே செலவு செய்து கொள்ளவும் மேற்படி 15அடி நீளம் 10 அடிஅகலம் கொண்ட அறைகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.800 வாடகையும் 20அடி நீளம் 15 அடி அகலம் கொண்ட அறைகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1200 வாடகையும் பெற்றுக் கொண்டு நடத்துவதற்கு மாநகராட்சியின் வருடாந்திர ஏல மதிப்பாக ரூ.20,00,000/- (ரூ.இருபது லட்சம்) நிர்ணயம் செய்து அரசு விதிகளின் படி பகிரங்க ஏலம் / டெண்டர் மூலமாக தகுதியுள்ள நிறுவனத்தாருக்கு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.367**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

(ஒம்...) வி.வி.ராஜன் செல்லப்பா,
மேயர்
மதுரை மாநகராட்சி

மதுரை
நாள் : 17.04.2013

**தீர்மானம்.1**

அன்பின் வடிவமாய், கருணையின் பிறப்பிடமாய், ஏழை எளிய மக்களின் நல பாதுகாவலராய் விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலைமச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் பல ஆண்டுகாலமாக வழங்கபடாமலிருந்த மதுரை மாநகராட்சியில் கருணை அடிப்படையில் 347 பேருக்கு வேலைவாய்ப்பினை தாயுள்ளத்தோடு வழங்கி அவர்களின் குடும்பங்களுக்கு பொற்காலத்தை உருவாக்கி தந்த மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களுக்கு இம்மாமன்ற கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவித்து கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.341**

**மேயர்**

**தீர்மானம்.2**

தமிழ் தமிழ் என்று அதன் மூலம் பிழைப்பு நடத்தி தன் குடும்பத்தினரை உலக பணக்கார வரிசையில் இடம் பிடிக்க வைத்தும் தன் சுயலாபத்திற்காக கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்து கொடுத்தும் தன் குடும்ப உறுப்பினர்களின் பதவியைக் காப்பாற்ற அப்பாவி இலங்கை தமிழர்களின் பதவியைக் காப்பாற்ற அப்பாவி இலங்கை தமிழர்களை காட்டிக்கொடுத்து போலியாக தன்னை தமிழ் தலைவர் என்று கூறி வரும் கருணாநிதியை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

இலங்கை தமிழர்கள் மட்டுமல்லாமல் உலக தமிழினத்தை காப்பாற்றியும் **சித்திரை முதல் நாளே தமிழ் புத்தாண்டு என்று** மீண்டும் **தமிழுக்கு சுதந்திரம்** வாங்கித்தந்து தமிழுக்கு நற்தொண்டாற்றி வரும் தமிழ் சங்கங்களுக்கு **தமிழ்த்தாய் விருது** என்பதை 2012ம் ஆண்டில் உருவாக்கி இந்த ஆண்டிற்காக தமிழ்த்தாய் விருதை இந்திய தலைநகரம் டில்லியில் சிறப்புடன் தமிழ் பணியாற்றி வரும் டில்லி தமிழ்ச்சங்கத்திற்கு வழங்கி விருதுக்கான தொகை 5 லட்சரூபாய் கேடயம் மற்றும் தகுதிச்சான்றிதழை தனது பொற்கரங்காளல் வழங்கி தொடர்ந்து தமிழையும் உலகத்தில் வாழும் ஒட்டுமொத்த தமிழ் இனத்தின் பாதுகாவலராய் இருந்து காத்து வரும் **தமிழ்த்தாய் புரட்சித்தலைவி அம்மா** அவர்களை இம்மாமன்றக்கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்.342**</u>

**மேயர்**

**தீர்மானம்.3**

மதுரை மாநகர மக்களின் போக்குவரத்து நெரிசலில் இருந்து நிம்மதியாக செல்ல கோரிப்பாளையம், காளவாசல் ஆகிய பகுதிகளில் 2 உயர்மட்ட மேம்பாலங்களை அமைக்க ஆணை பிறப்பித்து இதற்காக 2013–2014 நிதியாண்டில் ரூபாய்.130 கோடியை நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களை இம்மாமன்றக்கூட்டம் மதுரை வாழ் மக்களின் சார்பாக கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

<u>**மாமன்றத்தீர்மானம் எண்.343**</u>

**மேயர்**

**தீர்மானம்.4**

இந்தியாவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கிள்ளி கொடுத்தால் போதாது என்று அள்ளிக்கொடுக்கும் வாழும் வள்ளலைப்போல் தென் மாவட்ட மக்களின் இதய பகுதியாக விளங்கும் மதுரை மாநகராட்சிக்கு பல்வேறு திட்ட பணிகளுக்கு நிதி உதவி கொடுத்தது மட்டுமல்லாமல் மதுரை மாநகராட்சியின்

இட நெருக்கடியை போக்கும் வண்ணம் தோப்பூர், உச்சப்பட்டி ஆகிய இடங்களில் அனைத்து வசதிகளுடன் துணைக்கோள் நகரம் அமைக்கப்படும் என்று சட்டமன்றத்தில் அறிவித்து இதற்காக நிதியையும் ஒதுக்கீடு செய்து தொடர்ந்து மதுரை வாழ் மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தி வரும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இம்மாமன்றக்கூட்டம் மதுரை வாழ் மக்களின் சார்பாக கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.344**

**மேயர்**

**தீர்மானம்.5**

இம்மண்ணுலகை விட்டு மறைந்தாலும் மக்களின் மனங்களிலும் இல்லங்களிலும் தெய்வமாக வாழ்ந்துவருபவரும் மக்களின் மகத்தான சக்தி பெற்றவரும் வள்ளல் என அனைவராலும் போற்றப்பட்டவரும் தனக்கென வாழாமல் தமிழக மக்களுக்காக வாழ்ந்தவருமான பொன்மனச்செம்மல் பாரத ரத்னா தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் மறைந்த டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரை நவீன மயமாக்கப்பட்ட சென்னை உள்நாட்டு விமான நிலையத்தின் 2–வது முனையத்திற்கு சூட்ட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டமன்றத்தில் வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானத்தை இயற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றக்கூட்டம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**மாமன்றத்தீர்மானம் எண்.345**

**மேயர்**